# பாடம் 44: அருட்குறிகள்

**விசுவாசத்தைக் கற்பிப்போருக்கான அறிவுறுத்தல்**

| | |
|---|---|
| அடிப்படை நிலை (9 வயது) | : 1 முதல் 14 கருத்துகளைக் கற்பிக்கவும் |
| இடைப்பட்ட நிலை (12 வயது) | : 1 முதல் 14 கருத்துகளைக் கற்பிக்கவும் |
| மேம்பட்ட நிலை (15 வயது) | : 1 முதல் 16 கருத்துகளைக் கற்பிக்கவும் |

**முந்திய பாடத்தில் இருந்து மீள்பார்வை:**
முந்திய பாடங்களில், இறைமக்களுக்காக இயேசு கிறிஸ்துவால் நிறுவப்பட்டு திருச்சபையிடம் ஒப்படைக்கப்பட்ட ஏழு அருளடையாளங்கள் பற்றி நாம் கற்றோம். அவற்றில் புகுநிலை அருளடையாளங்கள் (திருமுழுக்கு, உறுதிபூசுதல், மற்றும் நற்கருணை), நலமளிக்கும் அருளடையாளங்கள் (ஒப்புரவு மற்றும் நோயில்பூசுதல்), பணியின் அருளடையாளங்கள் (திருநிலைகள் மற்றும் திருமணம்) குறித்து அறிந்து கொண்டோம். இந்த பாடத்தில், அருளடையாளங்களுக்கு நிகரான, ஆனால் அவையல்லாத அருட்குறிகள் பற்றி நாம் கற்போம்.

**தற்போதைய பாடம்:**
1. ஏழு அருளடையாளங்களும் அவற்றைத் தகுந்த முறையில் பெறுகின்றவர்களுக்கு அருளை வழங்குகின்றப் புறநிலை குறியீடுகளாக இருக்கின்றன என்பதை நாம் கற்றோம். ஆனால் திருச்சபை எண்ணற்ற அருட்குறிகளையும் கொண்டுள்ளது, இரு பதங்களும் பொதுவானவைப் போன்று தோன்றினாலும் இவை அருளடையாளங்களில் இருந்து வேறுபட்டவை.

அருட்குறிகள் என்பவை, ''கடவுளிடம் இருந்து தனது பரிந்துரையால் ஆவிக்குரிய மற்றும் உலகுசார் நன்மைகளைப் பெற்றுத்தரத் திருச்சபை பயன்படுத்தும் தூயப் பொருட்கள் அல்லது செயல்கள் ஆகும்'' (*பல்டிமோர் மறைக்கல்வி 1891*). நமது விசுவாசத்தைத் தூண்டவும், நமது பக்தியை ஆழப்படுத்த உதவவும் திருச்சபையால் பிரித்தெடுத்து அல்லது ஆசியளிக்கப்பட்ட எதுவும் ஓர் அருட்குறி ஆகும். இந்த அருட்குறிகளைப் பயன்படுத்துவோருக்காக திருச்சபை ஏறெடுக்கும் செபங்கள் வழியாகவும், அவர்கள் கொண்டுள்ள பக்தியின் வழியாகவும், அவர்கள் கடவுளின் அருளையும் ஆசிகளையும் பெறுகின்றனர்.

2. அருளடையாளங்கள் என்பவை கிறிஸ்துவால் நேரடியாகவே நிறுவப்பட்டன, அருட்குறிகள் என்பவை கிறிஸ்துவால் அவரது திருச்சபை வழியாக நிறுவப்பட்டன. இந்த அருட்குறிகள் அருளடையாளங்களுக்கு மாற்றாக அமைய முடியாது, ஆனால் அவற்றைச் சரியாகவும் விசுவாசத்தோடும் பயன்படுத்துவோருக்கு விண்ணக உதவியை உறுதி செய்வதற்கு அவை மிகவும் உதவுகின்றன.

*கதிம 1667*: ''தூய திருச்சபை தாயே, பெரிதும், அருட்குறிகளை நிறுவியுள்ளார். இவை அருளடையாளங்களை ஒத்தப் புனிதக் குறியீடுகளாக இருக்கின்றன. அவை திருச்சபையின் பரிந்துரையால் பெறப்படுகின்ற, குறிப்பாக ஆவிக்குரிய இயல்புள்ள விளைவுகளை வெளிக் காட்டுகின்றன. அவற்றால் மனிதர்கள் அருளடையாளங்களின் முதன்மை விளைவைப் பெற்று, வாழ்வின் பல்வேறு தருணங்களில் தூயநிலை அடைகின்றனர்.''

3. அருளடையாளங்கள் செய்வதைப் போன்று, அருளடையாளங்கள் நேரடியாக அருளை வழங்குவதில்லை, ஆனால் அருளடையாளங்களில் கடவுளின் அருளைப் பெறவும், அந்த அருளோடு ஒத்துழைக்கவும் (திருச்சபையின் செபத்தால்) நம்மைத் தயாரிக்கின்றன. அருளடையாளங்களின் கனியைப் பெறவும், வாழ்வின் வேறுபட்டச் சூழல்களைப் புனிதப்படுத்தவும் அருட்குறிகள் நம்மைத் தயாரிக்கின்றன. அருட்குறிகள், ஆகவே, தம்மிலேயே அருளடையாளங்களாக இல்லை, ஆனால் நமது தூயநிலையை அதிகரிப்பதிலும், அவற்றின் வல்லமையை அதே ஆதாரத்தில், கிறிஸ்துவின் பாடுகள், இறப்பு, உயிர்த்தெழுதல், மற்றும் விண்ணேற்றத்தில் இருந்து பெறுவதிலும் அவை அருளடையாளங்களை ஒத்திருக்கின்றன. ''இதன் காரணமாகவே, வழக்கமாகக் கிறிஸ்துவின் தூய சிலுவை அடையாளம் வரையும் பொழுது, இயேசுவின் பெயரை அழைத்து திருச்சபை ஆசிகளை வழங்குகிறது'' (கதிம 1671).

4. அருட்குறிகள் என்பவை, அருளடையாளங்களைப் போலன்றி அருளின் வாய்க்கால்களாக இருப்பதில்லை. அவை கடவுளின் ஆசிகளை நாம் பெறுவதற்கும், ஓர் ஆசியாக இருப்பதற்கும்

நமக்கு உதவுகின்றன. சரியான மனநிலையோடு பெற்றுக்கொண்டு, அவற்றை *விசுவாசத்தோடு* பயன்படுத்தினால், இந்த பயன்களை அருட்குறிகள் நமக்குப் பெற்றுத் தருகின்றன:

அ) உண்மையான அருள்;
ஆ) அற்பப் பாவங்களுக்கான மன்னிப்பு;
இ) உலகுசார் தண்டனைக்கானத் தள்ளுபடி;
ஈ) உடல் நலம் மற்றும் பொருள்சார் ஆசிகள்;
உ) தீய ஆவிகளிடம் இருந்து பாதுகாப்பு.

5. அருளடையாளங்களைப் போலன்றி, அருட்குறிகள் என்பவை புனிதப்படுத்தும் அருளை விளைவிப்பதில்லை, இந்த வல்லமை அருளடையாளங்களுக்கு மட்டுமே உரியது. இந்த அருட்குறிகளின் வல்லமை ஆசியளிக்கும் அருள்பணியாளர் (ஆயர், குரு, அல்லது திருத்தொண்டர்) மற்றும் அவற்றைப் பெறுகின்ற நபர் இருவரின் பக்தியையும் பெரிதும் சார்ந்துள்ளது. அது திருச்சபையின் செபங்கள், அவற்றின் மீது ஆசியளிக்கும் செபங்கள், மற்றும் இயேசு கிறிஸ்து, பேறுநிறை தாய், மற்றும் புனிதர்களின் பேறுகளையும் சார்ந்துள்ளது. அவை தம்மிலேயே ஆன்மாக்களை மீட்பதில்லை, ஆனால் அவற்றைச் சரியாகப் பயன்படுத்துவோருக்கு விண்ணக உதவியை உறுதியளிக்கின்றன.

6. திருச்சபையின் திருப்பணிகள், குறிப்பிட்ட வாழ்வு நிலைகள் (துறவற வாழ்வு போன்றவை), மற்றும் கிறிஸ்தவ வாழ்வுச் சூழல்களைத் தூயதாக்க அருட்குறிகள் வழங்கப்படுகின்றன. மனிதருக்குப் பயன்படும் பல விடயங்களுக்காகவும் அவை வழங்கப்படுகின்றன. (கதிம 1668)

7. பொருள்சார் விடயங்கள், காலங்கள், மற்றும் இடங்களை – திருமீதங்கள், தூய நாள்கள், திருச்சபை கட்டடங்கள், பலிபீடங்கள், திருவுருவங்கள், புனித நீர், செபமாலைகள், பதக்கங்கள், பவனிகள், மற்றும் திருப்பயணங்கள், மேலும் வீடுகள், பேருந்துகள் மற்றும் மீன்பிடி படகுகள் போன்ற "மதச்சார்பற்ற" பொருட்களையும் – அருட்குறிகள் "புனிதப் படுத்துகின்றன" அல்லது தூயவை ஆக்குகின்றன.

8. அருட்குறிகள் என்பவை திருமுழுக்குசார் குருத்துவத்தில் இருந்து பெறப்படுகின்றன. ஆகவே, திருமுழுக்கு பெற்ற ஒவ்வொரு நபரும் ஓர் "ஆசியாக" இருக்கவும், ஆசி வழங்கவும் அழைக்கப்பட்டுள்ளார். எனினும், ஓர் ஆசி திருச்சபை மற்றும் அருளடையாள வாழ்வை பெரிதும் சார்ந்துள்ளது, இதை நிர்வகிப்பது திருநிலைப்பாட்டு திருப்பணிக்கு (ஆயர்கள், குருக்கள், அல்லது திருத்தொண்டர்கள்) பெரிதும் ஒதுக்கப்பட்டுள்ளது. திருநிலைப்பாடு பெற்ற மனிதர்களின் ஆசிகள், புதிய செபமாலையை அல்லது திருவுருவத்தை அருட்குறிகளாக மாற்றும் ஆற்றல் கொண்டவை. பொதுநிலையினரும் ஆசி வழங்கலாம், அவர்களது ஆசிகள் பெரிதும் செபம் மற்றும் கடவுளிடம் வேண்டுவதைச் சார்ந்தவை.

9. அருட்குறிகள் எப்பொழுதும் ஒரு செபம், வழக்கமாக கைகளை வைத்தல் அல்லது செபமாலை மணிகளை எண்ணுதல் அல்லது சிலுவை அடையாளம் வரைதல் அல்லது புனித நீரால் தெளித்தல், தூபமிடுதல் போன்ற ஒரு குறியீடு அல்லது செயலை உள்ளடக்கியவை. மேலும், நாம் எதிர்நோக்கும் கடவுளின் அருளை பெறுவதற்கு அருட்குறிகள் நம்மைத் தயார் செய்கின்றன.

10. **ஆசிகள்**. "அருட்குறிகள் நடுவே (மனிதர்கள், உணவுகள், பொருட்கள், மற்றும் இடங்களுக்கு) ஆசியளித்தல் முதலாவது வருகிறது. ஒவ்வொரு ஆசியும் கடவுளைப் புகழ்ந்து அவரது கொடைகளுக்காக வேண்டுகிறது. கிறிஸ்துவில், தந்தையாம் கடவுளின் 'அனைத்து ஆவிக்குரிய ஆசியாலும்' கிறிஸ்தவர்கள் ஆசி பெறுகின்றனர்" (கதிம 1671). சில ஆசிகள் கடவுளின் சேவைக்கு நபர்களை நேர்ந்தளிக்கின்றன, எடுத்துக்காட்டாக துறவற உறுதியேற்பு அல்லது பொதுநிலை திருப்பணியாளர்களுக்கு ஆசியளித்தல் (கதிம 1672). மற்ற ஆசிகளோ பொருட்கள், கட்டங்கள், மற்றும் பிறவற்றை கடவுளின் பணிக்கு அர்ப்பணிக்கின்றன.

ஆலயங்களின் நேர்ந்தளிப்பு, திருப்பலியில் "எல்லா வல்ல இறைவனிடமும்" செபத்தோடு இணைந்த பாவமன்னிப்பு, மற்றும் குருத்தோலைகள், மெழுகுதிரிகள், அல்லது சாம்பல் மீது வழங்கப்படும் ஆசிகள் போன்ற அருள்பணியாளர்கள் வழங்கும் ஆசிகள் எல்லாம் அருட்குறி செயல்களாகும். பொதுநிலை கத்தோலிக்கர்கள் தங்களது உணவுகள், திருவருகைக்கால தளிர்வளைகள், மற்றும் தங்கள் குழந்தைகளுக்கு ஆசி வழங்கலாம். எனினும் அத்தகைய

ஆசிகள் ''வெறுமனே'' கடவுளிடமான வேண்டுதலாக அமைகின்றன. அருள்பணியாளர் மட்டுமே உறுதியளிக்கும் ஆசி வழங்க அதிகாரம் கொண்டுள்ளார், மேலும் அவர்கள் மட்டுமே தங்கள் பின்னுள்ள முழு திருச்சபையின் அதிகாரத்தாலும் செபங்களாலும் ஒரு புதிய திருச்சிலுவை அல்லது செபமாலையை எடுத்து அருட்குறிகளாக மாற்ற முடியும்.

11. **பேயோட்டுதல்**. அருட்குறிகளின் இரண்டாம் வகையாக பேயோட்டுதல் இருக்கிறது. அருட்குறிகளின் மிகவும் குறிப்பிடத்தக்க விளைவுகளில் ஒன்றாக, தீய ஆவிகளின் வல்லமை அல்லது தாக்கத்தை விரட்டும் திறன் இருக்கிறது (கதிம 1673). அவை செபங்களில் அல்லது புனித பெனடிக்ட் பதக்கம் போன்ற மற்ற அருட்குறிகளில் வைக்கப்பட்டுள்ளதைக் காணலாம். ஒரு நபர் அல்லது பொருளை தீயவனின் அதிகாரத்திற்கு எதிராகப் பாதுகாக்கவும், அவனது ஆதிக்கத்தில் இருந்து விடுவிக்கவும் திருச்சபை பொதுவிலும் அதிகாரத்துடனும் இயேசு கிறிஸ்துவின் பெயரால் கேட்கும் பொழுது பேயோட்டுதல் நடைபெறுகிறது.

*கதிம 1673*: ''திருமுழுக்கு கொண்டாட்டத்தில் பேயோட்டுதல் எளிய வடிவில் நடைபெறுகிறது. 'பெரும் பேயோட்டுதல்' என அழைக்கப்படும் பேயோட்டும் சடங்கானது ஒரு குருவால் ஆயரின் அனுமதி பெற்று மட்டுமே செய்ய முடியும். அந்த குரு முன்மதியோடும், திருச்சபையால் நிறுவப்பட்ட விதிகளைச் சரியாகக் கடைபிடித்தும் அதைச் செய்ய வேண்டும்... நோய், சிறப்பாக உளம்சார் நோய் என்பது வேறுபட்ட விடயம்; இதற்கு சிகிச்சை அளிப்பது மருத்துவ அறிவியலுக்கு உரியது. ஆகவே, பேயோட்டுதலைச் செய்வதற்கு முன்பு, (வெறும்) நோயை அன்றி, தீயவனின் நிகழ்மையைக் கையாள்வதை உறுதி செய்ய வேண்டும்.''

12. **ஆசியளித்தப் பொருட்கள்**. விசுவாசிகள் பக்தியைத் தூண்டப் பயன்படுத்தும் சொல்ல முடியாத பலவகைப் பொருட்களுக்குத் திருச்சபை ஆசியளிக்கிறது. அவை எல்லாவற்றையும் பட்டியலிடுவது சாத்தியமற்றதாக இருக்கும், ஆனால் சில முக்கியமானவை: புனித நீர், மெழுகுதிரிகள், சாம்பல், குருத்தோலைகள், திருச்சிலுவைகள், பதக்கங்கள், செபமாலைகள், உத்தரியங்கள், மற்றும் நம் ஆண்டவர், பேறுநிறை கன்னி, மற்றும் புனிதர்களின் படங்கள். இவற்றில் மெழுகுதிரிகள், சாம்பல், மற்றும் குருத்தோலைகள் போன்ற சில ஆசியளித்தப் பொருட்கள் திருவழிபாடு வழியாக நமக்கு நேரடியாக வழங்கப்படுகின்றன. உத்தரியம், செபமாலை, மற்றும் அற்புத பதக்கம் போன்ற மற்றவை நமது பேறுநிறை அன்னையால் நிறுவப்பட்டன அல்லது பரப்பப்பட்டன. எந்த கத்தோலிக்கரின் பக்தி மற்றும் ஆன்மிக வாழ்விலும் முக்கியப் பங்கு வகிக்கும் இவை போன்ற அருட்குறிகள் அவை விரும்பும் மரியாதையோடும் மாண்போடும் நடத்தப்பட வேண்டும்.

13. **விதிமுறைகளும் செபங்களும்**. திருப்பலியில் இயேசுவின் திருப்பெயருக்கு தலை வணங்குதல், அல்லது மண்டியிடுதல், அல்லது சிலுவை அடையாளம் வரைதல் போன்ற விதிமுறைகளும் செபங்களும் எல்லாமே அருட்குறிகளாகும். இவற்றில் பெரும்பாலான செயல்கள் மிக அடிக்கடி, சிந்திக்காமலே பொறுப்பின்றிச் செய்யப்படுகின்றன. கடவுளின் ஆழ்ந்த அன்பை அடைய நமக்கு உதவிட, திருச்சபையால் கலந்தாலோசித்து நிறுவப் பெற்றவை என்பதால் எல்லா விதிமுறைகளும் செபங்களும் நிதானமாகவும் பக்தியோடும் செய்யப்பட வேண்டும்.

14. (அருட்குறியான) ஒரு பொருள் மிக நைவுற்றால், அதாவது அருட்குறியாகப் பயன்படுத்த முடியாத நிலையை அடைந்தால், ஒருவர் அதை சாதாரணமாகத் தூக்கியெறியக் கூடாது. புனிதக்கேட்டைத் தடுக்க, அந்த அருட்குறி மண்ணகத் தனிமங்களுக்குத் திருப்பி அளிக்கப்பட வேண்டும். எடுத்துக்காக, புனித நீர், எவரும் நடக்காதப் பகுதியில் ஊற்றப்பட வேண்டும். உத்தரியங்கள் மற்றும் புனித நூல்கள் போன்ற எரிக்கத்தகு அருட்குறிகள், எரிக்கப்பட்டு புதைக்கப்பட வேண்டும். எரியாத பெரிய அருட்குறிகள் உருமாற்றப்பட வேண்டும், அதனால் அவை அருட்குறிகளாகத் தோன்றாதவாறு செய்து (எடுத்துக்காட்டாக, ஒரு திருவுருவம் சிறுத் துண்டுகளாக உடைக்கப்பட வேண்டும்) புதைக்க வேண்டும். உலோகங்களால் செய்யப்பட்டப் பொருட்களை உருக்கி வேறொரு நோக்கத்திற்கு பயன்படுத்தலாம்.

15. செபமாலை மணிகளைக் கொண்டு செபித்த, உத்தரியங்கள் அணிந்த, அல்லது அற்புத பதக்கங்களைப் பயன்படுத்திய மக்களை விவிலியத்தில் காணாத வேளையில், மறைநூலின் பல பத்திகள் அருட்குறிகளின் பயன்பாட்டை ஆதரிக்கின்றன. கடவுள் இயல்பானப் பொருட்களை அருளைச் செயல்படுத்தும் கருவிகளாகப் பயன்படுத்துகிறார் என்பது உண்மை. கீழே சில எடுத்துக்காட்டுகள் உள்ளன:

இஸ்ரயேலர்கள் பாலைநிலத்தில் அலைந்து திரிந்தபோது அவர்களிடையே தமது நிகழ்மையை நிறுவ, கடவுள் மோசேயை உடன்படிக்கை பேழையைச் செய்ய அறிவுறுத்தினார், இறுதியாக அதன்மீது அவரது மாட்சி தங்கும். பேழையின் மீது வானதூதர்களின் திருவுருவங்கள் இருந்தன (விப 25:10-22).

இஸ்ரயேல் மக்கள் கடவுளுக்கு எதிராகப் பாவம் செய்து, அவர்களுக்காக மோசே செபித்த பொழுது, ஒரு வெண்கலப் பாம்பைச் செய்து ஒரு கோலில் பொருத்துமாறு அவரிடம் கடவுள் கூறினார், அதனால் அதை நோக்கும் பொழுது மக்கள் நலமடைய முடியும் (எண் 21:5-7).

நாசீர் வாழ்வு (கடவுளுக்கு அர்ப்பணமான வாழ்வு) வாழ்ந்த இஸ்ரயேலின் நீதித்தலைவர்களில் ஒருவரான சிம்சோன், மது அருந்தாமலும் தமது முடியை வெட்டாமலும் அர்ப்பணத்துடன் வாழ்ந்ததால் அவருக்கு மீமனித வலிமை வழங்கப்பட்டது (நீத 13-16).

நாமான் தமது தொழுநோயில் இருந்து நலமடைய எலிசாவிடம் சென்ற பொழுது, யோர்தான் நதியில் ஏழு முறை அவர் தம்மைக் கழுவிக்கொள்ள எலிசா அறிவுறுத்தினார், அதனால் அவர் நலமடைவார் (2அர 5:10).

ஒரு மனிதர் எலிசாவின் எலும்புகளைத் தொட்ட பொழுது, உண்மையில் அது ஒரு புனிதரின் திருப்பண்டம், அவர் மீண்டும் உயிர் பெற்று எழுந்து நின்றார் (2அர 13:20-21).

நெறிகேடான வழக்கங்களை வெறுத்து ஒதுக்கியவர்களின் நெற்றியில் சிலுவை குறியிடுமாறு இறைவாக்கினர் எசேக்கியேலை கடவுள் அறிவுறுத்தினார் (எசே 9:4,6).

இயேசு ஒரு பார்வையற்ற மனிதருக்கு மண்ணைப் பயன்படுத்தி நலமளித்தார் (யோவா 9:6-12).

இரத்தப்போக்கினால் துன்புற்ற ஒரு பெண் இயேசுவின் ஆடையைத் தொட்டதால் நலமடைந்தார் (லூக் 8:44).

பவுலின் தோலைத் தொட்ட முகத்துண்டுகள் அல்லது கைக்குட்டைகளை, நோயுற்றோர் மீது வைத்த பொழுது நோய்கள் நலமாயின, தீய ஆவிகள் விடுவிக்கப்பட்டன (திப 19:11-12).

இந்த பொருட்கள் மாயவித்தை செய்யவில்லை. மாறாக, அவற்றை அடைந்தவர்கள் தங்கள் விசுவாசத்தால் அருளைப் பெறுவதற்கு அவை தயாரித்தன. இதுவே அருட்குறியின் பின்னுள்ள சரியான விதியாகும்.

16. மேலே விவரிக்கப்பட்ட இந்த பொருட்களில் சில, கடவுள் அருவருத்த சிலைவழிபாட்டுக்கு உரிய விதங்களில் பின்னர் பயன்படுத்தப்பட்டன.

சிம்சோன் தமது மீமனித வலிமை கடவுளிடம் இருந்தன்றி, தமது ஏழு நீண்ட சடைமுடிகளில் இருந்து வந்ததாக நம்பினார். அதன் விளைவாக, அவர் பெலிஸ்தியரின் கைகளில் வீழ்ந்தார் (நீத 16).

இஸ்ரயேலருக்கு நலத்தைக் கொணர்ந்த வெண்கலப் பாம்பு பின்னர் எருசலேம் கோயிலில் நிறுவப்பட்டு, ஒரு வழிபாட்டுப் பொருளாக மாறியது.

உடன்படிக்கை பேழை ராணுவ வெற்றி பெறுவதற்கு ஒரு நல்யோகம் தருகின்ற பொருளாகப் பயன்படுத்தப்பட்டது. உண்மையில் எருசலேம் கோயிலே தீட்டாக்கப்பட்டு சிலைவழிபாட்டு வழக்கங்களின் வடிகுழியாக மாறியது.

இத்தகைய முறைகேடுகள் வழுக்களின் எண்பித்தல் அன்று. முதலில் இந்த பொருட்களைப் பயன்படுத்துவது தவறானது என்றால், கடவுள் அவற்றை இவ்வாறு பயன்படுத்தக் கட்டளை இட்டிருக்க மாட்டார். ஆகவே, சடங்குகளும் பொருட்களும் முறைகேடாகவும் மூடத்தனமாகவும் பயன்படுத்தப்படுவதால் மட்டுமே, அத்தகையச் சடங்குகள் மற்றும் பொருட்களின் சரியானப் பயன்பாட்டைத் தடைசெய்ய வேண்டும் என்பதல்ல. கடவுள் ஒருபோதும் மாறாதவர் என்பதை நினைவில் கொள்ளுங்கள்; அவர் எப்பொழுதும் அதேபோன்று இருக்கிறார். மேலும் இன்றும், அவர் சடங்குகளையும் பொருட்களையும் தமது அருளைப் பகிர்வதற்குத் தொடர்ந்து பயன்படுத்துகிறார்.